# உயர்நிலைப் பள்ளிகளில் பாட அடிப்படையிலான வகைப்பாட்டுத் திட்டம்: ஓராண்டு நிறைவு

**கீர்த்திகா ரவீந்திரன்**

கல்வி அமைச்சு அறிமுகம் செய்த பாட அடிப்படையிலான வகைப் பாடு (Subject Based Banding), 120 உயர்நிலைப் பள்ளிகளில் ஓராண்டாகச் செயல்பட்டு வரு கிறது.

இம்முறையில், மாணவர்கள் குறிப்பிட்ட பாடத்தில் அவர்களது திறனுக்கேற்ப மூன்று பிரிவுகளா கப் பிரிக்கப்படுகின்றனர்.

மேலும், மாணவர்கள் பெறும் அடைவுநிலையைப் பொறுத்து அவர்கள் உயர்நிலைப் பாடங்க ளைத் தேர்வு செய்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

கணக்குப் பாடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட பாசிர் ரிஸ் உயர்நிலைப் பள்ளி மாணவி ஷெத் ஜியா சத்யம், 12, உயர்நிலை ஒன்று நியமனக் குழு 3ல் கணக் குப் பாடத்தைத் தற்போது படித்து வருகிறார். அதுமட்டுமல்லாமல் ஆங்கிலம், அறிவியல், தாய்மொ ழிப் பாடங்களையும் நியமனக் கு ழு 3ல் அவர் பயின்றுவருகிறார்.

நியமனக் குழு 3 பாடங்கள் அனைத்தும் உயர் தேவையுள்ள பாடங்கள் ஆகும். அத்துடன், உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் பாடங்கள் இருப்பதால் சில நேரம் சமாளிப்பது சிரமமாக இருப்ப தாகக் கூறினார் ஜியா.

“ஆசிரியர்கள் அளிக்கும் ஊக்கமும் அன்பும் எனக்குப் பேருதவியாக இருப்பதால் புதிய பாடங்களைக் கற்று, அவற்றில் தேர்ச்சி பெற எனக்கு ஆவலாக உள்ளது,” என்றார் ஜியா.

பாட அடிப்படையிலான வகைப்பாட்டுத் திட்டம் 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. உயர்நிலைப்பள்ளிகளில் இயங்கி வரும் விரைவுநிலை, வழக்க நிலைப் பிரிவுகளுக்குப் பதிலாக இந்தப் புதிய திட்டம் 2024ஆம் ஆண்டிலிருந்து எல்லா உயர் நிலைப்பள்ளிகளிலும் நடப்புக்கு வரும் என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

இந்தத் திட்டம், பாசிர் ரிஸ் உயர்நிலைப் பள்ளி உட்பட முன் னோட்டமாக 28 உயர்நிலைப் பள் ளிகளில் 2020ஆம் ஆண்டு தொடங்கியது. வெவ்வேறு கல் விப் பிரிவுகளைச் சேர்ந்த மாண வர்களை ஒரே வகுப்பில் ஒருங் கிணைக்கப் புதிய வழிகளை இந் தக் திட்டம் ஆராய்ந்தது.

முழுமையான பாட அடிப்படை யிலான வகைப்பாட்டின்கீழ் தற் போது 120 பள்ளிகள் இயங்கி வரு வதால் விரைவுநிலை, வழக்க நிலைப் பிரிவுகள் மாணவர் களுக்கு இடையே ஏற்றத்தாழ்வு கள் ஏற்படாது என்றார் பாசிர் ரிஸ் உயர்நிலைப் பள்ளி முதல்வர் கிரேஸ் சுவா.

“எந்தெந்த பாடங்களில் மாண வர்கள் சிறப்பாகத் தேர்ச்சி பெறு கிறார்கள் என்று அடையாளம் கண்டு உறுதிசெய்ய இந்தப் பாட அடிப்படையிலான வகைப்பாடு உதவுகிறது,” என்றார் திருமதி சு வா.

மேலும், பாட அடிப்படை யிலான வகைப்பாட்டின்கீழ் பயிலும் மாணவர்களுக்குச் சிறந்த கல்வி உதவியையும் அளிக்க ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப் படும் என்று கூறினார் திருமதி சுவா.

இந்தப் புதிய திட்டத்தின்கீழ் ஆசிரியர்கள் குறிப்பிட்ட பிரிவில் உள்ள மாணவர்களுக்கு ஏற்ற கற் பித்தலைப் பின்பற்ற இயலும்.

சிரமப்படும் மாணவர்கள் குறைந்த தேவையுள்ள பாடங்க ளைத் தேர்வு செய்யலாம். அதே நேரம், நன்றாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கள் உயர் தேவையுள்ள பாடங்களைத் தேர்ந்தெடுக்க லாம்.



மாணவி ஷெத் ஜியா சத்யம், 12, உயர்நிலை ஒன்று நியமனக் குழு 3ல் கணக்குப் பாடத்தை தற்போது படித்துவருகிறார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

kirthigaravi@sph.com.sg